உ

சிவமயம்


## அருள்மிகு மாதங்கீஸ்வரி அஞ்சனாக்ஷி அம்பாள் உடனுறை
## அருள்மிகு மதங்கீஸ்வர சுவாமி திருக்கோயில்



# ஸ்தல புராணம் (சுருக்கம்)

திருநாங்கூர், சீர்காழி வட்டம்-609 106.

334
006



அருள்மிகு மாதங்கீஸ்வரி அஞ்சனுக்ஷி அம்பாள்

உ

சிவமயம்

திருநாங்கூர்

# அருள்மிகு மாதங்கீஸ்வரி அஞ்சனாக்ஷி அம்பாள் உடனுறை அருள்மிகு மதங்கீஸ்வர சுவாமி திருக்கோயில் ஸ்தல புராணம் [சுருக்கம்]

*வெளியீட்டு நாள் :* ஸ்ரீமுக ஆ ஐப்பசி மீ 11 ந்தேதி 27—10—93 புதன் கிழமை முதல் 29—10—93 வெள்ளி கிழமை முடிய நடைபெற்ற ஸ்ரீநவசண்டி மஹாயாகத்தின் முதல் நாளான 27—10—93 புதன் அன்று வெளியிடப் பட்டது.

தமிழ்நாடு அர்ச்சகர்கள் சமூக நலச்சங்க மாநில தலைவர்
சிவஸ்ரீ **S. அருணாசலம்** B.A., B.L., அவர்கள் தலைமையில்

தமிழ்நாடு இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை துணை ஆணையர்
திருமிகு **இ. பொன்னப்பபிள்ளை** B.Com , B.L. அவர்களால்
வெளியிடப்பட்டது.

## நவசண்டி மஹாயாகம்

*தொகுத்தளித்தவர் :*

நாங்கூர் திரு **கா. நெடுஞ்செழியன்** எம்.ஏ.பி.ஜி.டி இஎ
தொல்பொருள் ஆய்வுத்துறை, கங்கைகொண்டசோழபுரம்

*இலவசமாக வெளியீட்டோர் :*

**தமிழ்நாடு அர்ச்சகர்கள் சமூக நலச்சங்கம்**
நாகை கா. மி. மாவட்டம் (கிளை)

உ

சிவமயம்

# ஸ்ரீமாதங்கீஸ்வரி அஞ்சனுக்ஷி அப்பாள் உடனுறை ஸ்ரீ மதங்கீஸ்வர ஸ்வாமி திருக்கோயில்

திருநாங்கூர், சீர்காழி வட்டம்-609 106.

நாங்கூர் கா. நெடுஞ்செழியன்
எம்.ஏ.பி.ஜி.டி.இ.ஏ
தொல்பொருள் ஆய்வுத்துறை,
கங்கைகொண்டசோழபுரம்.

## ஸ்ரீ மதங்கீஸ்வர ஸ்வாமி திருக்கோயில், திருநாங்கூர்.

திருநாங்கூர் நாகை மாவட்டம், சீர்காழி வட்டத்தில் அமைந்துள்ளது. சீர்காழியிலிருந்து தென்கிழக்கே 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

**தலப்பெருமை:-** பராசவனம் என நாங்கூரை தலபுராணம் குறிக்கிறது. பராசவனத்திலுள்ள மதங்காசிரமத்தில் தவம் செய்த மதங்க முனிவரின் வேண்டுகோளின்படி திருமால் பன்னிரு மூர்த்திகளாகிப் பராசவனத்தில் வெவ்வேறு இடங்-களில் எழுந்தருளி சிவபிரானை வழிபட்டனர் என பராசவனப் புராணம் கூறுகின்றது.

**சங்ககால இலக்கியங்களில் திருநாங்கூர்:-** சங்க இலக்கியங்களான பட்டினப்பாலை, பொருநர் ஆற்றுப்படை, சிலப்பதிகாரம் முதலியவற்றில் 'நாங்கூர் வேளிர்' என்ற குறுநில மன்னர் மகளை கரிகால்சோழன் திருமணம் செய்துகொண்டதாக குறிப்பு காணப்படுகிறது. எனவே கரிகால்சோழனின் மனைவி நாங்கூரைச்சேர்ந்தவர் என்பது தெரியவருகின்றது.

**சுந்தரர் பாடல்களில் நாங்கூர்:-** சைவ சமயத்தினர் நாங்கூரை வைப்புத்தலமாக எண்ணுவர். சுந்தரர் இருபாடல்களில் நாங்கூரைகுறிப்பிடுகின்றார். சுந்தரர் காலம் கி.பி.9ஆம் நூற்றாண்டாகும்.

**(i) திருநாட்டுத்தொகை:-** "தேங்கூருந் திருச்சிற்றம்பலம் சிராப்பள்ளி பாறுகூரேங்கள் பிரானுறையும் கடம்பன்துறை பூங்கூரும் பரமன் பரஞ்சோதி பயிலுடுர் நாங்கூர் நாட்டு நாங்கூர் என்றும்".

**(ii) ஊர்த்தொகை:-**

''தாங்கூர்பிணி நின்னடியார் மேலகள வருளாயே
வேங்கூரு றைவாய் விளமர் நகராய் விடையார் கொடியானே,
நாங்கூரு றைவாய் தேங்கூர் நகராய் நல்லூர் நம்பரனே
பாங்கூர் பலிதேர் பரனே, பரமா, பழனப்பதியானே''
என்றும் சுந்தரர் பாடியுள்ளார்.

**செவிவழிச்செய்தி:-** திருநாங்கூரில் நாலாயிரம் அந்தணர்கள் வாழ்ந்ததாகச் செவிவழிச்செய்தியாகச் கூறப்படுகிறது. தில்லை மூவாயிரவர் என்பதுபோல் நங்கை நாலாயிரவர் என்றொரு வழக்கும் உண்டு. இங்கு அந்தணர்கள் அதிகம் இருந்ததனை திருமங்கையாழ்வார் அடிக்கடிகுறிப்பிடுகின்றார்

**சேந்தனார்:-** திருவிசைப்பா — திருப்பல்லாண்டு பாடிய சேந்தனார் இவ்வூரைச் சேர்ந்தவர். இவர் நாங்கூர் சேந்தன் என்று குறிக்கப்படுகின்றார். இவ்வூர் நாலாயிரத்தொருவர் விநாயகர் கோயிலில் காணப்படும் சேந்தனார் சிற்பம் குறிப்பிடதக்கதாகும்.

**புராணச்செய்தி:-** மதங்கரிஷியின் மகன் மாதங்கர். மாதங்கருக்கு பிரம்மவித்தை என்ற பெயரில் அஞ்சனாட்சியே மகளாகத்தோன்றி திருவெண்காட்டிலுள்ள சுவேதாரண்யேசுவரரை மணந்தார் என்று பராசவனப்புராணம் கூறுகின்றது.

**கோயில் அமைப்பு:-** இக்கோயில் கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம், திருச்சுற்று, திருச்சுற்றுமதில் கொண்டு கிழக்கு நோக்கி கட்டப்பட்டுள்ளது. கருவறையின் கிழக்கு புறத்தில் இடது பக்கத்தில் மாதங்கீஸ்வரி சந்நிதியும், இடைக்கட்டிப்பகுதியின் வடதிசையில் சண்டிகேசுவரர் சந்நிதியும் உள்ளன. திருச்சுற்றின் வடக்குப்புறத்தில் தெற்கு திசை நோக்கி காளி சந்நிதியும் அடுத்து மதங்கமுனி சந்நிதியும் உள்ளன. தென்மேற்கு மூலையில் விநாயகர் சந்நிதி உள்ளது. இதையடுத்து முருகன் வள்ளி தெய்வானை சந்நிதிகளும், வடமேற்கு மூலையில் மகாலெட்சுமி, ஸ்ரீதேவி, பூதேவி சந்நிதிகளும் காணப்படுகின்றன.

**நந்தி மண்டபம்:-** நந்தி மண்டபத்தில் இரண்டு நந்தி சிற்பங்கள் உள்ளன. இரு நந்திகளில் ஒன்று கருவறையை நோக்கியும், மற்றொன்று திருவெண்காட்டை நோக்கியும் உள்ளது. இக்கோயில் கருவறை விமானம் கி.பி. 9-10 ஆம் நூற்றாண்டைச்சார்ந்த முற்காலச்சோழர் காலப்படைப்பாகும்.

**சிற்பங்கள்:-** இக்கோயில் முற்காலச் சோழர் காலத்தைச் சார்ந்தது என்பதற்கு இக்கோயிலிலுள்ள தேவகோட்டச்சிற்பங்கள் சான்று பகர்கின்றன. இச்சிற்பங்கள் மிகவும் நேர்த்தியாகவும், கலை அழகுடனும் வடிக்கப்பட்டுள்ளன. இக்கோயில் கருவறை புறச்சுவரின் தெற்கு தேவக்கோட்டத்தில் வியாக்கியான தெட்சிணாமூர்த்தி சிற்பமும், மேற்கு தேவகோட்டத்தில் லிங்கோத்பவமூர்த்தி சிற்பமும், வடக்கு தேவ கோட்டத்தில்

நான்முகன் சிற்பமும் காணப்படுகின்றன. இச்சிற்பங்கள் கி.பி. 9-10ஆம் நூற்றாண்டைச் சார்ந்த முற்கால சோழர் கலைப் படைப்பாகும்.

திருச்சுற்று சந்நிதியிலுள்ள மதங்கரிஷி சிற்பம் சோழர் காலத்தைச் சார்ந்ததாகும். இச்சிற்பத்தின் உயரம் 65 செ.மீ. அகலம் 40செ.மீ. இக்கோயிலிலுள்ள சண்டிகேசுவரர், மாதங்கீஸ்வரி, சுப்ரமண்யர், வள்ளி, தெய்வானை சிற்பங்கள் 18ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை.

**நாராயணி சிற்பம்:-** இக்கோயில் திருச்சுற்றின் கருவறையின் வடக்கு புறத்தில் நாராயணி சிற்பம் என்று இக்கோயில் குருக்கள் கூறுகின்றார். இது துர்கை சிற்பமாகும். இச்சிற்பத்தின் உயரம் 40 செ.மீ. அகலம் 60செ.மீ. சோழர் காலமாகும்.

**நவக்கிரகம்:-** இக்கோயில் திருச்சுற்றின் மகாமண்டபத்தில் வடக்கு புறத்தில் நவகிரக சிற்பங்கள் உள்ளன. காலம் கி.பி. 18ஆம் நூற்றாண்டாகும்.

**காளி:-** பிற்காலத்தில் செய்துவைக்கப்பட்ட மரத்தால் ஆனதாகும். ஐந்து வருடத்திற்கொருமுறை வைகாசி திங்கள் புதன்கிழமையன்று காளி வீதியுலாக்காட்சி நடைபெறும்.

இக்கோயில் அர்த்த மண்டபத்தில் கி.பி. 12-13 ஆம் நூற்றாண்டைச்சார்ந்த முருகன், பைரவர், சூரியன் சிற்பங்கள் தனிச்சிற்பங்களாக உள்ளன.

எனவே கட்டடக்கலையிலும், சிற்பக்கலையிலும் சிறந்து விளங்கும் இக்கோயில் மிகவும் பழுதற்று உள்ளே செல்ல

முடியாத சூழ்நிலையில் உள்ளது. இவைகளை உடனடியாக திருப்பணிகள் செய்து பாதுகாப்பது இவ்வூர் மக்களின் இன்றியமையா கடமையாகும். தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையும் இதற்கு உடனடியாக ஆவனச் செய்து பழமையான திருக்கோவிலையும் சிற்பக்கலைகளையும் காக்க வேண்டுகிறேன்.

இக்கோயில் வரலாற்றை எழுத அனுமதித்த தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் திரு. நடன காசிநாதன் அவர்கட்கும் இந்து சமய அறநிலையத்துறை துணை ஆணையர் திரு. பொன்னப்பப்பிள்ளை அவர்கட்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

**கா. நெடுஞ்செழியன்**



ஸ்ரீ அர்ச்சனா, 2-A, வெள்ளிப்பிள்ளையார் கோவில், கடலூர்-3.